## ABSTRACT

Animal Husbandry Department - Framing of "Tamil Nadu State Pig Breeding Policy" – Orders – Issued.

---

## ANIMAL HUSBANDRY, DAIRYING, FISHERIES AND FISHERMEN WELFARE (AH-4) DEPARTMENT

G.O.(Ms.) No.83

Dated: 01.10.2024
ஸ்ரீ குரோதி வருடம், புரட்டாசி 15
திருவள்ளுவர் ஆண்டு 2055

Read:

1. From the Joint Commissioner (P) Government of India, Ministry of Agriculture and Farmer Welfare, Department of Animal Husbandry, Dairying and Fisheries Department, Krishi Bhavan, New Delhi, Letter No.18-18/2015-Meat, dated 29.09.2016 and 22.11.2017.
2. Government letter No.18761/AH.4/2017, Dated: 28.11.2017 and 23.01.2023.
3. From the Director of Animal Husbandry and Veterinary Services Roc No.41504/D3/2016, Dated: 19.07.2022, 13.09.2022, 29.03.2022, 19.07.2022 and 18.02.2023.

*****

**ORDER:**

In the letter first read above, the Joint Commissioner(P), Ministry of Agriculture and Farmers Welfare, Department of Animal Husbandry, Dairying and Fisheries, Government of India has stated that as per recommendations of the Expert Committee constituted in AHD&F Department for the breeding program of pigs in the Country, the National Guidelines for formulation of State Pig Breeding was prepared and communicated. Further Clause No.4(vii) of the guidelines states that "State Pig Breeding Policy will be mandatory for importing States before submission of any proposal for import of exotic breeds of pigs."

2. In the Government letter reference second read above, the DA&VS was requested to take necessary action.

3. In the letter dated 07.09.2021, the Director of Animal Husbandry and Veterinary Services has stated that in order to evolve a comprehensive breeding policy for pigs in Tamil Nadu, a technical committee was constituted based on the National Guidelines for Formulation of State Breeding Policy with the following members.

1. Additional Director (Farms)
2. Joint Director (MC)

3. Professor and Head, AGB, MVC
4. Professor and Head, LPM, MVC
5. Assistant Director (Planning)
6. Assistant Director (Farms)

4. The Director of Animal Husbandry and Veterinary Services has send the proposal, and sent the final draft State Pig Breeding Policy vide letter dated 29.03.2022.

5. The Government after careful examination of the proposal of Director of Animal Husbandry and Veterinary Services at para 4 above decided to approve the **"State Pig Breeding Policy 2024"** as annexed to this order.

6. The Director of Animal Husbandry and Veterinary Services is requested to notify the "State Pig Breeding Policy" in the Tamil Nadu State Government Gazette (Extraordinary) and to upload the same in the public domain.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**K.GOPAL**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

To
The Director of Animal Husbandry and Veterinary Services, Chennai-35.
The Chief Executive Officer,
Tamil Nadu Animal Welfare Board, Chennai – 35.
The Works Manager,
Government Central Press, Chennai – 600 079,
The National Informatics Centre, Secretariat, Chennai – 9.
Copy to:-
The Senior Personal Assistant to Hon'ble Minister
for Fisheries – Fishermen Welfare and Animal Husbandry, Chennai-9.
The Personal Assistant to Additional Chief Secretary to Government,
Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare Department, Chennai-9.
The Law Department, Chennai - 9.
Stock file / Spare copies.

// Forwarded by Order //

03/10/2024
**SECTION OFFICER**
3/10/2024

## ANNEXURE

G.O.(Ms).No.83, Animal Husbandry, Dairying, Fisheries and Fishermen Welfare (AH-4) Department, Dated: 01.10.2024

# Tamil Nadu State Pig Breeding Policy 2024

Pig farming is a promising source of meat production in India with its inherent characteristics of higher fecundity, faster growth rate and better feed conversion ability, when compared to other livestock enterprises. Provision of nutritional security to the growing population of our country is the need of the hour which can only be met through integrated approach in livestock farming. This warrants utilization of the untapped potential possessed by the swine husbandry, Pig rearing, particularly, in Tamil Nadu is carried out under diverse social, climatic and environmental conditions. Hence, a well-defined "Pig Breeding Policy" is essential to provide the much-needed fillip to pig rearing to ensure nutritional security. State Pig Breeding Policy 2024 Tamil Nadu envisages the following objectives:

**Objectives:** 1. To improve the genetic potential of non-descript pig population (i.e. genetic improvement through selective breeding).

2. To conserve/maintain nucleus herds of elite indigenous pig germplasm.
3. To adopt crossbreeding as a means to improve the non-descript pigs and to gradually replace the non-descript animals with crossbred germplasm with desired level of exotic inheritance.
4. To encourage maintenance of crossbred animals at farmers' holdings under scientific management, with low-cost, location-specific feed formulation.
5. To expand and strengthen the breeding infrastructure and support mechanism to propagate elite germplasm eventually through Artificial insemination (AI).

## (I) Breeding Policy

**(A) Recognition and conservation of indigenous germplasm:** (1) Breed registration: Necessary steps will be taken by Tamil Nadu Veterinary and Animal Sciences University for registration of indigenous pig germplasm in collaboration with Indian Council of Agricultural Research - National Research Centre on pigs and Indian Council of Agricultural Research - National Bureau of Animal Genetic Resources, Karnal.

(2) Nucleus breeding farm for such type of indigenous registered germplasm will be established by Tamil Nadu Veterinary and Animal Sciences University separately.

(3) Pigs with superior genetic potential will be collected from the field and State/ Central Government farms to the nucleus herd.

(4) Pedigreed animals will be given only to interested farmers in order to propagate native germplasm in farmers' holdings.

(5) No crossbreeding should be encouraged in the herds maintaining the priced animals.

**(B) Breeding with exotic germplasm:** (1) Import of exotic germplasm such as Large White Yorkshire, Duroc and Landrace from reputed sources after following stringent bio-security measures.

(2) Preference will be given for import of live pigs.

(3) Import of frozen semen will also be eventually considered once the necessary infrastructure and capacity building is in place.

(4) Tamil Nadu Veterinary and Animal Sciences University will pioneer the efforts to develop breed-specific nucleus herds of imported germplasm for subsequent use in crossbreeding programme.

**(C) Crossbreeding:** Crossbreeding the non-descript stocks with Large White Yorkshire pigs; and production of triple cross (Large White Yorkshire x Landrace x Duroc) with Duroc as terminal sire will be the breeding plan.

**II) Breeding Plan**

**(A) Nucleus farm:** (1) Nucleus farm will be established with pure exotic breeds, superior crossbreeds and pure indigenous breed.

(2) Crossbred animals of desired level of exotic inheritance will be maintained through inter se mating. In case of nucleus herd of purebreeds, mixing/crossing of germplasm must be restricted.

(3) Minimum of 30 breedable sow units will be maintained with a sex ratio of 1:3 and thus 10 sires (2 sires from each 5 unrelated sire lines) will have to be procured by each of the unit.

(4) Selection of male animals should be based on weaning weight (best 33%) and 9 month body weight (best 5%), based on three stage sequential selection. Selection of female animals should be based on dam's litter size at birth (>7) and weaning

weight (best 25%) and number of functional teats (at least 6 pairs of functional teats). However, these can be changed as per performance of local crossbred animals.

(5) Centralized data recording system has to be initiated. Generation-wise genetic evaluation will be carried out to estimate genetic gain. The genetic parameters and genetic trend will be estimated.

(6) Inbreeding must be avoided. Replacement of boars must be done at regular intervals of two years of productive herd life. Sire exchange programme among the farms will also be helpful to reduce the effect of inbreeding. Culled males (at 9 months of age) should be slaughtered.

(7) Minimum of three number of farrowings per sow will have to be recorded.

(8) Weightage must be given to traits such as litter size birth weight and weight at weaning.

(9) Besides routine productive, reproductive, adaptive and carcass traits, lifetime production traits will also be recorded.

**(B) Multiplier and Farmers' Herd:** (1) These herds will adopt inter se mating among the crossbred animals, with the desired exotic inheritance (either 50 or 75 per cent).

(2) No indiscriminate crossing will be allowed at farmers will.

**III) Mating System:** Breeding / propagation activity with Artificial Insemination (AI) will also be eventually attempted. The State Level Multiplier Farm will have a training center for the progressive farmers including modest facility/ laboratory for semen collection, evaluation and preservation.

The selection of boars in breeding programme will be based on the following points:

(a) Boars with pedigree details and quality certificate issued by the registered veterinary practitioner (competent authority) will alone be used in the breeding programme.

(b) Boars used for AI programme will be screened for semen quality once in three months.

(c) Semen should be collected, only twice a week per boar.

(d) The earliest age for boars used for AI must be eight months for indigenous boars and 10 months for exotic boars.

(e) Boars above 36 months of age should not be used for breeding purpose.

(f) The reports on the quality of these boars shall be annually sent to Department of Animal Husbandry, Dairying and Fisheries (DADF) for evaluation.

(g) Boars must be periodically vaccinated against swine fever, pasteurellosis, Foot and Mouth Disease (FMD) and other diseases, as regulated.

IV) **Culling:** Unproductive animals and animals with specific genetic disorders should be eliminated along with its family from the breeding programme.

V) **Traceability and Disease control:** A systematic process of identification of animals using 12 digit UID ear tags prescribed by Government of India will be adopted. Animal to be registered on "Information Network for Animal Productivity and Health" (INAPH) and data regarding animal vaccination breeding etc., will be uploaded on INAPH for traceability purpose, to keep track on individual animal. Stringent Disease control measures should be followed. In endemic areas, periodical vaccination against specific diseases should be done. Periodical vaccination against contagious and infectious diseases to be carried out.

VI) **Capacity building:** (1) Training of farm managers/ large scale entrepreneurs on breeding management.

(2) Regular / refresher training for technical personnel, para - vets and livestock service provider.

(3) Training on semen collection and AI to farmers/ service provider.

VII) **Infrastructure Building:** (1) Provision may be kept for import/ purchase of advanced machinery for feeding and watering.

(2) Development/provision of infrastructure at farmers' field for climate resilient housing for pigs.

(3) Establishment of a bacon factory in the State would reduce the transportation cost by rail and boost piggery in the State.

(4) Value addition of pork and pork-products should be promoted for better profitability of the farmers.

(5) Cooperative based market chain should be developed.

(6) Specific quarantine facilities for imported animals will be developed, wherein and wherever needed, by the Director of Animal Husbandry and Veterinary Services.

**VIII) Subsidies and other financial support:** (1) Easy bank credit facility

(2) One time subsidy for small holders purchasing breeding boars

(3) Annual subsidies for using AI services

(4) One time subsidy for AI service providers

(5) One time subsidy for waste management system

(6) Price subsidies for indigenous pork producers

(7) Subsidies for infrastructure development

(8) Subsidies for the import of GP and PS stocks

(9) Tax holiday for specific period for large scale commercial pig farms

**IX) Revisiting the policy:** Implementation of pig breeding policy will not only target socio-economically weak communities including women folk in terms of their sustainable livelihood security but also address the issues of pig production system under changing climatic scenario by improved production and productivity. It is also expected to mitigate the current demand supply gap and open avenues for development of entrepreneurship and export of pork and pork products.

As the pig rearing system is dynamic and pig population structure is expected to change over a period of time, the present breeding policy requires to be reviewed after a minimum period of five years.

K.GOPAL
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

// True Copy //

SECTION OFFICER

<u>இணைப்பு</u>

அரசாணை (நிலை) எண்.83, கால்நடை பராமரிப்பு, பால்வளம்,
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, நாள்: 01.10,2024

## தமிழ்நாடு மாநில பன்றி வளர்ப்புக் கொள்கை 2024

ஏனைய கால்நடை வளர்ப்புத் தொழில்களுடன் ஒப்பிடுகையில், அதிக ஈன்திறம், வேகமான வளர்ச்சி வீதம் மற்றும் மேம்பட்ட வகையில் தீவனத்தை உருவாக்கும் திறன் ஆகிய உள்ளார்ந்த பண்புகளுடன் இந்தியாவில் இறைச்சி உற்பத்தியின் நம்பிக்கைக்குரிய ஓர் ஆதாரமாக பன்றி வளர்ப்பு அமைந்துள்ளது. நமது நாட்டின் வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கேற்ப ஊட்டச்சத்து பாதுகாப்பை வழங்குவது காலத்தின் தேவையாகும். கால்நடை வளர்ப்பில் ஒருங்கிணைந்த அணுகுமுறையின் வாயிலாக மட்டுமே இதனை நிறைவேற்ற இயலும். இது பன்றி வளர்ப்பில் பயன்படுத்தப்படாத வள ஆதாரத்தைப் பயன்படுத்துவதை உறுதி செய்கிறது. பன்றி வளர்ப்பு, குறிப்பாக, தமிழ்நாட்டில் பல்வேறு சமூக, தட்பவெப்ப மற்றும் சுற்றுச்சூழல் நிலைமைகளின் கீழ் மேற்கொள்ளப் படுகிறது. எனவே, ஊட்டச்சத்து பாதுகாப்பை உறுதி செய்வதற்கு பன்றி வளர்ப்பில் மிகவும் தேவையான ஊக்குவிப்பை வழங்குவதற்கு நன்கு வரையறுக்கப்பட்ட "பன்றி வளர்ப்புக் கொள்கை" இன்றியமையாததாகும். 2024 ஆம் ஆண்டு, தமிழ்நாடு மாநில பன்றி வளர்ப்பு கொள்கை பின்வரும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

**நோக்கங்கள்:**

1. சாதாரணமான பன்றிகளின் மரபணுத் திறனை மேம்படுத்துதல் (அதாவது தேர்ந்தெடுக்கப்பட்ட இனப்பெருக்கம் வாயிலாக மரபணு மேம்பாடு).
2. மேம்பட்ட வகையைச் சேர்ந்த, தனிநிலை நாட்டுப் பன்றிகளின் இனப்பெருக்கத் திசுக்களைப் (Germplasm) பாதுகாத்தல் / பராமரித்தல்.
3. சாதாரணமான பன்றிகளை மேம்படுத்துவதற்கு இனக்கலப்பு வழிமுறையைப் பின்பற்றுதல் மற்றும் வழக்கமாக வளர்க்கப்படும் / காணப்படும் காட்டுப்பன்றி வகைகளுக்குப் பதிலாக படிப்படியாக விரும்பிய அளவில் வேற்றினப் பண்புகளை மரபுவழிப்பெற்று இனக்கலப்பு செய்யப்பட்ட இனப்பெருக்கத் திசுக்களைக் கொண்டு மாற்றுதல்.
4. அறிவியல் மேலாண்மை அமைப்புமுறையின்கீழ், குறைந்த விலையில், இடத்திற்கேற்ற தீவனத்தை உருவாக்கி உழவர்களுக்குச் சொந்தமான இடங்களில் இனக்கலப்பு செய்யப்பட்ட விலங்குகளைப் பராமரிப்பதை ஊக்குவித்தல்.

5. செயற்கை கருவூட்டல் வாயிலாக, இறுதியில், மேம்பட்ட வகையைச் சேர்ந்த இனப்பெருக்கத் திசுக்களைப் பெருக்குவதற்கு, இனப்பெருக்க உட்கட்டமைப்பையும் ஆதரவு ஏற்பாட்டு முறையையும் விரிவுபடுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல்.

I) **இனப்பெருக்கக் கொள்கை (அ) நாட்டுப் பன்றிகளின் இனப்பெருக்கத் திசுவை அங்கீகரித்துப் பாதுகாத்தல்:** (1) வளர்ப்பினப் பதிவு: இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம் – தேசிய பன்றிகள் ஆராய்ச்சி மையம் மற்றும் இந்திய வேளாண் ஆராய்ச்சி மன்றம் – கால்நடை மரபணு வள ஆதாரங்களுக்கான தேசியப் பிரிவு, கர்னல் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் நாட்டு பன்றிகளின் இனப்பெருக்கத் திசுவைப் பதிவு செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(2) அத்தகைய பதிவு செய்யப்பட்ட நாட்டுப்பன்றிகளின் இனப்பெருக்கத் திசுக்களுக்கான தனிநிலை இனப்பெருக்கப் பண்ணை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தால் தனியாக உருவாக்கப்படும்.

(3) நேரடியாகவும், தனிநிலைப் பன்றிகளுக்கான மாநில அரசு / மத்திய அரசுப் பண்ணைகளிலிருந்தும் உயர்தர மரபணுத் திறனுடன் சுவடியபன்றிகள் சேகரிக்கப்படும்.

(4) உழவர்களின் நிலத்தில் பாரம்பரிய இனப்பெருக்கத் திசுக்களைப் பெருக்கும் வகையில் விருப்பமுள்ள உழவர்களுக்கு மட்டும் மரபுவழி விலங்குகள் வழங்கப்படும்.

(5) விலை நிருணயிக்கப்பட்ட விலங்குகளைப் பராமரித்து வரும் நிலங்களில் யாதொரு கலப்பினமும் ஊக்குவிக்கப்படமாட்டாது.

(ஆ) **அயலின இனப்பெருக்கத் திசுக்களைக் கொண்டு இனப்பெருக்கம் செய்தல்:** (1) கடுமையான உயிரி – பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி, புகழ்பெற்ற வள ஆதாரங்களிலிருந்து பெரிய வெள்ளை யார்க்கைஷயர், டூராக் மற்றும் லாண்ட்ரீஸ் போன்ற அயலின இனப்பெருக்கத் திசுக்களை இறக்குமதி செய்தல்.

(2) உயிருள்ள பன்றிகளை இறக்குமதி செய்வதற்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

(3) தேவையான உட்கட்டமைப்பு வசதிகளும் திறன் மேம்பாடும் இருக்குமெனில், உறைவிக்கப்பட்ட விந்தணுக்களை இறக்குமதி செய்வது குறித்தும் இறுதியில் கருதிப்பார்க்கப்படும்.

(4) இனக்கலப்புத் திட்டத்தில் பயன்படுத்துவதற்காக, இறக்குமதி செய்யப்பட்ட இனப்பெருக்கத் திசுக்களின் குறிப்பிட்ட இனம் சார்ந்த தனி இனப் பன்றிகளை உருவாக்குவதற்கான முயற்சிகளை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் முன்னெடுத்துச் செல்லும்.

(இ) இனக்கலப்பு: பெரிய வெள்ளை யார்க்ஷையர் பன்றிகளுடன் சாதாரண பன்றிகளை இனக்கலப்பு செய்தல்: டூராக் பன்றியை இனப்பெருக்கத்திற்குப் பயன்படும் இறுதி ஆண் பன்றியாகக் கொண்டு மூன்று இனக்கலப்பு (பெரிய வெள்ளை யார்க்ஷையர் x லேண்ட்ரேஸ் x டூராக்) செய்தல். இதுவே இனப்பெருக்கத் திட்டமாகும்.

II) இனப்பெருக்கத்திட்டம்

(அ) தனிநிலைப் பண்ணை (1) முற்றிலும் அயலினங்களைச் சேர்ந்த பன்றியினங்கள், உயர்தர கலப்பின பன்றியினங்கள் மற்றும் முழுமையான நாட்டு பன்றியினங்களைக் கொண்டு தனிநிலைப் பண்ணை (Nucleus Farm) அமைக்கப்படும்.

(2) பல்வேறு இனங்களுக்கு இடையேயான இனச்சேர்க்கை வாயிலாக விரும்பிய அளவிலான அயலின மரபுடைய விலங்குகளின் கலப்பினப்பெருக்கம் பேணப்படும். கலப்பில்லா இனங்களின் தனிநிலை கால்நடைத் தொகுதி (Nucleus herd) எனும் நேர்வில், இனப்பெருக்கத் திசுக்களைக் கலத்தல் / இனக்கலப்பு செய்தல் கட்டுப்படுத்தப்பட வேண்டும்.

(3) குறைந்தளவு 30 கருவுறத்தக்க பெண் பன்றிகளைக் கொண்ட பிரிவுகள் 1:3 என்ற பாலின வீதத்தில் பராமரிக்கப்படும். எனவே, ஒவ்வொரு பிரிவிற்கும் இனப்பெருக்கத்திற்கான 10 ஆண் பன்றிகள் (தொடர்பில்லா 5 ஆண் பன்றியினங்களிலிருந்தும் தலா 2 ஆண் பன்றிகள் வீதம்) கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

(4) ஆண் பன்றிகளை, பால்குடி மறப்புக் காலத்து எடையின் அடிப்படையிலும் (சிறப்பானவற்றில் 33%), 9 மாத காலத்து உடல் எடையின் அடிப்படையிலும் (சிறப்பானவற்றில் 5%) மூன்று கட்டத் தொடர் தெரிவின் அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டும். பெண் பன்றிகள், ஒரே நேரத்தில் தாய்ப்பன்றி ஈனும் குட்டிகளின் எண்ணிக்கையின் (litter) அடிப்படையிலும் (>7) பால்குடி மறப்புக் காலத்து எடையின் அடிப்படையிலும் (சிறப்பானவற்றில் 25%) பால்சுரப்பு மடிக்காம்புகளின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் (குறைந்தளவு 6 ஜோடி செயல்பாட்டு மடிக்காம்புகள்) தெரிவு செய்யப்பட வேண்டும். இருப்பினும், உள்ளூர் கலப்பினப் பன்றிகளின் செயல்திறத்திற்கேற்ப இவற்றை மாற்றிக் கொள்ளலாம்.

(5) மையப்படுத்தப்பட்ட தரவுப் பதிவு ஏற்பாட்டு முறை உருவாக்கப்பட வேண்டும். மரபியல்சார் ஆதாயத்தை மதிப்பிடுவதற்கு, தலைமுறை வாரியான, மரபியல் மதிப்பீடு செய்யப்படும். மரபியல் வரையறைகள் மற்றும் மரபியல் போக்கு போன்றவை மதிப்பீடு செய்யப்படும்.

(6) உள்ளினச் சேர்க்கை தவிர்க்கப்பட வேண்டும். ஆண் பன்றிகள் இனப்பெருக்க காலமான இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை என்ற சீரான கால இடைவெளிகளில் மாற்றப்பட வேண்டும். இனப்பெருக்கத்திற்கான ஆண் பன்றிகளை உழவர்களுக்கிடையே மாற்றிக் கொள்ளும் திட்டம் உள்ளினச் சேர்க்கையின் பாதிப்பைக் குறைக்க உதவும். தேர்ந்தெடுக்கப்பட்ட (9 மாத கால வயதுடைய) ஆண் பன்றிகள் உணவுக்காக வதை செய்யப்படவேண்டும்.

(7) ஒவ்வொரு தாய்ப்பன்றியும் மூன்று முறை குட்டிகளை ஈனுவதைப் பதிவு செய்ய வேண்டும்.

(8) ஒரே நேரத்தில் பிறக்கும் குட்டிகளின் எண்ணிக்கை,பிறக்கும் போது குட்டியின் எடை, பால்குடி மறப்பின் போதுள்ள எடை போன்ற பண்புக் கூறுகள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

(9) வழக்கமான உற்பத்தி, இனப்பெருக்க, தகவமைப்பு மற்றும் இறைச்சிப் பண்புக் கூறுகளுடன், வாழ்நாள் உற்பத்திப் பண்புக் கூறுகளும் பதிவு செய்யப்படவேண்டும்.

(ஆ) இனப்பெருக்கம் மற்றும் உழவர்களின் கால்நடைத் தொகுதி: (1) இப்பன்றித் தொகுதிகள், தேவையான அயலின மரபுக் கூறுகளுடன் (50 அல்லது 75 விழுக்காடு), இனக்கலப்பு செய்யப்பட்ட பன்றிகளுக்கிடையேயான இனச்சேர்க்கையை ஏற்றுக் கொள்ளும்.

(2) உழவர்களின் விருப்பப்படியான வரிசைமுறையற்ற இனக்கலப்பு அனுமதிக்கப்பட மாட்டாது.

III) இனச்சேர்க்கை அமைப்பு முறை: செயற்கை முறைக் கருவூட்டலுடன் கூடிய இனப்பெருக்க நடவடிக்கையும் இறுதியில் மேற்கொள்ளப்படும். விந்தணு சேகரிப்பு, மதிப்பீடு மற்றும் பாதுகாத்தல் ஆகியவற்றுக்கான போதிய வசதி / ஆய்வகம் உட்பட முற்போக்கு உழவர்களுக்கான பயிற்சி மையம் ஒன்றையும் மாநில அளவிலான இனப்பெருக்கப் பண்ணை கொண்டிருக்கும்.

பின்வரும் கூறுகளின் அடிப்படையில் இனப்பெருக்கத் திட்டத்திற்கான ஆண் பன்றிகள் தெரிவு செய்யப்படும். அவையாவன:

(a) மரபுவழி விவரங்களுடன் கூடிய மற்றும் பதிவுபெற்ற கால்நடை மருத்துவர் (தகுதிவாய்ந்த அலுவலர்) வாயிலாக அளிக்கப்பட்ட தரச் சான்றிதழுடன் கூடிய ஆண் பன்றிகள் மட்டுமே இனப்பெருக்கத் திட்டத்தில் பயன்படுத்தப்படும்.

(b) செயற்கைமுறைக் கருவூட்டல் திட்டத்திற்குப் பயன்படுத்தப்பட்ட ஆண் பன்றிகள், விந்தணுத் தரத்திற்காக, மூன்று மாதங்களுக்கு ஒருமுறை கண்காணிக்கப்படும்.

(c) ஒவ்வொரு ஆண் பன்றியிடமிருந்தும், வாரத்திற்கு இருமுறை மட்டுமே விந்தணு சேகரிக்கப்பட வேண்டும்.

(d) செயற்கைமுறைக் கருவூட்டலுக்குப் பயன்படுத்தப்படும் ஆண் பன்றிகளில் நாட்டுப் பன்றிகளுக்குக் குறைந்தளவு வயதாக எட்டு மாதங்களும் அயலினப் பன்றிகளுக்கு 10 மாதங்களும் இருக்க வேண்டும்.

(e) 36 மாதங்களுக்கு மேலான ஆண் பன்றிகள் இனப்பெருக்க நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படக் கூடாது.

(f) இந்த ஆண் பன்றிகளின் தரம் குறித்த அறிக்கைகள் மதிப்பீட்டிற்காக ஆண்டுதோறும் கால்நடை வளர்ப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறைக்கு அனுப்பப்பட வேண்டும்.

(g) ஆண் பன்றிகளுக்கு முறைப்படுத்தப்பட்டவாறாக பன்றிக் காய்ச்சல், பாச்சுரெல்லா தொற்று (சீழுறு குருதிப்பெருக்கு), கோமாரி மற்றும் ஏனைய நோய்களுக்கான தடுப்பூசி காலமுறைப்படி இட்டுக்கொள்ளப்பட வேண்டும்.

IV) தரப்பகுப்பு: இனப்பெருக்கத்திற்குப் பயன்படாத கால்நடைகள் மற்றும் குறிப்பிட்ட மரபுவழிக் குறைபாடுகளுள்ள கால்நடைகள் அவற்றின் குடும்பத்துடன் இனப்பெருக்கத் திட்டத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்.

V) தொடர்புகாண் திறன் மற்றும் நோய்க் கட்டுப்பாடு: மத்திய அரசால் குறிப்பிடப்பட்ட 12 இலக்க தனித்துவ அடையாள எண்ணுடன் கூடிய காதுக்குறியிடும் முறையான செயல்முறை பின்பற்றப்படும். கால்நடை இனப்பெருக்கம் மற்றும் சுகாதாரத்துக்கான தகவல் தொடரமைப்பில் (INAPH) கால்நடை பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், ஒவ்வொரு தனிப்பட்ட பன்றியையும் பின்தொடர்ந்து கண்காணிப்பதற்காக, தொடர்புகாண் நோக்கத்திற்காக, கால்நடைத் தடுப்பூசி, இனப்பெருக்கம் போன்றவை தொடர்பான தரவுகள் கால்நடை இனப்பெருக்கம் மற்றும் சுகாதாரத்துக்கான தகவல் தொடரமைப்பில் பதிவேற்றம் செய்யப்படும்.

கடுமையான நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். உள்ளூர்த் தொற்றுப் பகுதிகளில், குறிப்பிட்ட நோய்களுக்கு எதிரான தடுப்பூசிகளை காலமுறைப்படி / குறித்த காலத்திற்கொருமுறை இட்டுக் கொள்ள வேண்டும். தொற்று நோய்களுக்கு எதிராக காலமுறைப்படி / குறித்த காலத்திற்கொருமுறை போடப்படும் தடுப்பூசி இட்டுக் கொள்ள வேண்டும்.

VI) திறன் மேம்பாடு: (1) பண்ணை மேலாளர்கள் / பேரளவிலான தொழில் முனைவோர்களுக்கு கால்நடை இனப்பெருக்க மேலாண்மை குறித்த பயிற்சிகள்.

(2) தொழில்நுட்பப் பணியாளர்கள், துணை-கால்நடை மருத்துவப் பணியாளர்கள் மற்றும் கால்நடை சேவை வழங்குநர்களுக்கு முறையான / புத்தாக்கப் பயிற்சி

(3) உழவர்கள் / சேவை வழங்குநர்களுக்கு விந்தணு சேகரிப்பு மற்றும் செயற்கைமுறைக் கருவூட்டல் குறித்த பயிற்சி

VII) உட்கட்டமைப்பு மேம்பாடு: (1) தீவனமிடுதல் மற்றும் தண்ணீர் விடுவதற்கு மேம்பட்ட இயந்திரத் தொகுதிகளை இறக்குமதி / கொள்முதல் செய்வதற்கான வழிவகை.

(2) பன்றிகளுக்கு உழவர்களின் வயல்களில் காலநிலைகளைத் தாங்கும் இருப்பிட வசதிகளுக்கான உட்கட்டமைப்பு வசதியினை ஏற்படுத்துதல் / வகைசெய்தல்.

(3) உலர் பன்றியிறைச்சித் தொழிற்சாலையை மாநிலத்தில் ஏற்படுத்துவது, இரயில்களில் அவற்றை அனுப்புவதற்கான செலவைக் குறைப்பதுடன், மாநிலத்தில் பன்றிவளர்ப்பை ஊக்குவிக்கும்.

(4) உழவர்களுக்கு சிறப்பான ஆதாயத்தை அளிக்கும் வகையில் பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சிப் பொருட்களில் மதிப்புக் கூட்டுதல்

(5) கூட்டுறவு சார்ந்த சந்தைத் தொடரமைப்பு உருவாக்கப்பட வேண்டும்.

(6) தேவைப்படும் இடங்களிலெல்லாம் கால்நடை வளர்ப்பு மற்றும் கால்நடை மருத்துவ சேவைகள் இயக்குநர் வாயிலாக இறக்குமதி செய்யப்பட்ட கால்நடைகளைத் தனிமைப்படுத்துவதற்கான குறிப்பிட்ட வசதிகள் உருவாக்கப்படும்.

VIII) மானியங்களும் ஏனைய நிதி உதவியும்: (1) எளிமையான வங்கிக் கடன் வசதி

(2) சிறிய அளவிலான உழவர்கள், இனப்பெருக்கத்திற்கான ஆண் பன்றிகளைக் கொள்முதல் செய்வதற்கு ஒருமுறை மட்டும் வழங்கப்படும் மானியம்.

(3) செயற்கைமுறைக் கருவூட்டல் சேவைகளைப் பயன்படுத்துவதற்கு வருடாந்திர மானியங்கள்

(4) செயற்கைமுறைக் கருவூட்டல் சேவை வழங்குநர்களுக்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் மானியம்.

(5) கழிவு மேலாண்மை அமைப்புமுறைக்கு ஒருமுறை மட்டுமே வழங்கப்படும் மானியம்.

(6) நாட்டுப் பன்றி இறைச்சி உற்பத்தியாளர்களுக்கு விலை மானியங்கள்.

(7) உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்கு மானியங்கள்

(8) GP மற்றும் PS கால்நடை இறக்குமதிக்கு மானியங்கள்

(9) பேரளவிலான வணிகமுறைப் பன்றி வளர்ப்புப் பண்ணைகளுக்கு குறிப்பிட்ட காலத்திற்கு வரி (விலக்கு)

IX) கொள்கையை மறுபரிசீலனை செய்தல்: பன்றி வளர்ப்புக் கொள்கையைச் செயல்படுத்துவது, பெண்கள் உட்பட சமூக-பொருளாதார ரீதியாக பலவீனமான சமூகங்களின் நிலையான வாழ்வாதார பாதுகாப்பை மட்டுமே இலக்காகக் கொண்டிராமல், மேம்பட்ட உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் மூலம் மாறிவரும் காலநிலைக்கேற்ப பன்றி உற்பத்தி முறையில் ஏற்படுகிற சிக்கல்களையும் தீர்த்து வைக்கிறது. இது தற்போதையதேவைக்கும்,வழங்கலுக்குமிடையேயான இடைவெளியைக் குறைக்குமென்றும் தொழில் முனைவோர் மேம்பாட்டிற்கும் பன்றி இறைச்சி மற்றும் பன்றி இறைச்சிப் பொருட்களின் ஏற்றுமதிக்கான புதிய வழிமுறைகளை வகுத்தளிக்குமென்றும் எதிர்பார்க்கப் படுகிறது.

பன்றி வளர்ப்பு முறை ஆற்றல்மிக்கதாக இருப்பதாலும், பன்றிகளின் எண்ணிக்கை சார்ந்த அமைப்பு குறிப்பிட்ட காலத்தில் மாறுமென எதிர்பார்க்கப்படுவதாலும், தற்போதைய இனப்பெருக்கக் கொள்கையானது ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகேனும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

கே. கோபால்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

// உண்மை நகல் //

03/10/2024
பிரிவு அலுவலர்
3/10/2024